**மிகவும் அவசரம் / தனிக்கவனம்**

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை - 6.**

**ந.க.எண். 04210/ எம் / இ4 / 2022, நாள்: 28.04.2022.**

பொருள்: பள்ளிக்கல்வி - மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் - NMMSS (National Means-cum-Merit Scholarship Scheme) உதவித்தொகை - 2015-16, 2016-17, 2017-18 ஆகிய ஆண்டுகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்ற NMMS உதவித்தொகை பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவ / மாணவியர்களில், இணைப்பில் உள்ள மாணவர்களுக்கு மட்டும் சரியான வங்கிக்கணக்கு விவரங்களை 06.05.2022க்குள் அனுப்பிவைத்திடக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: மத்தியக் கல்வி அமைச்சகத்தின் 01.12.2021 மற்றும் 19.01.2022 தேதியிட்ட மின்னஞ்சல் கடிதங்கள்.

பார்வையில் காணும் மத்தியக் கல்வி அமைச்சகத்தின் கடிதங்களின்படி, 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று வந்த NMMS உதவித்தொகை பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவ மாணவியரில் ஒரு சிலருக்கு வங்கிக்கணக்கு விவரங்கள் National Scholarship Portal-ல் முழுமையாக பதிவேற்றம் செய்யப்படாததாலும் அல்லது அவ்வங்கிக்கணக்கு எண் நடைமுறையில் இல்லாததாலும் சார்ந்த மாணவர்களின் உதவித்தொகை வங்கிக்கணக்கில் செலுத்த இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பில் உள்ள மாணவர்கள் பயின்ற பள்ளி மற்றும் அப்பள்ளிகளின் மாவட்ட விவரங்கள் முழுமையாக கொடுக்கப்படவில்லை என்பதால் சில வழிமுறைகளைப் பின்பற்றியபின், மாணவர்களைக் கண்டறியத் தேவைப்படும் அனைத்து விவரங்களும் இக்கடிதத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்கள் மூலமாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மாணவ மாணவியரின் வங்கிக்கணக்கு விவரங்களை சரிசெய்தும் அவற்றை நடைமுறையில் வைக்க அறிவுறுத்துமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவல் உடனடியாக மத்திய கல்வி அமைச்சகத்திற்கு அனுப்பவேண்டியுள்ளதால் இப்பொருள் சார்ந்து தனிக்கவனம் செலுத்தி 06 மே 2022–க்குள் msectnse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மீளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:
மத்திய கல்வி அமைச்சகத்திலிருந்து பெறப்பட்ட 9 பட்டியல்கள்.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்:– அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்:–
அரசு முதன்மைச் செயலாளர்
பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9
– அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.